"அரசின் நிர்வாக செயல்பாட்டை அரசியல் அர்த்தங்களுடன் சர்ச்சையாக்க வேண்டாம்": தலைமைச் செயலாளர் இறையன்பு வேண்டுகோள்

சென்னை, அக்.27

அரசின் நிர்வாக செயல்பாட்டை அரசியல் அர்த்தங்களுடன் சர்ச்சையாக்க வேண்டாம் என்று தலைமைச்செயலாளர் இறையன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழக அரசு துறைகளின் செயலாளர்களுக்கு தலைமைச்செயலாளர் இறையன்பு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழக அரசின் சில துறைகள் அமல்படுத்தி வரும் மத்திய அரசு மற்றும் மாநில அரசு திட்டங்களில் செயல்பாடுகளை பற்றி தெரிந்துகொள்வதற்கு தமிழக கவர்னர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

எனவே அவரது விருப்பத்தின் அடிப்படையில், உங்களின்துறைகளில் தற்போது அமலில் இருக்கும் மாநில மற்றும் மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்த குறிப்புகளை தயாராக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்த திட்டங்கள் தொடர்பான 'பவர் பாயிண்ட்' விளக்கங்களையும் இதற்காக தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். கவர்னரிடம் காட்டுவதற்கு முன்பு, தயார் செய்யப்பட்ட பவர் பாயிண்ட் விளக்கம் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான தேதி மற்றும் நேரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முற்றுப்புள்ளி வைத்த அறிக்கை

இந்த கடிதம் வெளியான நிலையில், அரசியல் ரீதியான கருத்துகள் பகிரப்பட தொடங்கின. பல்வேறு கருத்துகள் பகிரப்பட்ட நிலையில் அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அறிக்கை ஒன்றை தலைமைச்செயலாளர் இறையன்பு நேற்று வெளியிட்டார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

அலுவல் ரீதியாக துறையின் செயலாளர்களுக்கு நான் அனுப்பிய ஒரு கடிதம் அவசியமற்ற ஒரு விவாதப்பொருளாக மாறி இருப்பதாக அறிகிறேன். தமிழ்நாட்டுக்கு கவர்னர் புதிதாக பொறுப்பேற்றுள்ளார்.

அவருக்கு தமிழக அரசின் பல்வேறு சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து தெரிவிக்கும் வகையில் அதற்கான தரவுகளை திரட்டி வைத்து கொள்ளும்படி அனைத்து துறை அலுவலர்களுக்கும் அலுவல் ரீதியான ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன்.

திட்டங்கள், செயலாக்கங்கள் குறித்து இதுபோல் தகவல்களை திரட்டி வைத்துக்கொள்ள அறிவுறுத்துவது நிர்வாகத்தில் வழக்கமானதுதான். அதனை அரசியல் பொருள் கொண்ட சர்ச்சையாக ஆக்குவது சரியானது அல்ல. அரசின் நிர்வாக செயல்பாடுகளை உணர்ந்தவர்களுக்கு இது வழக்கமான நடைமுறைகளில் ஒன்றுதான் என்பது தெரியும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பெண் எஸ்.பி.க்கு பாலியல் தொல்லை வழக்கில் சிறப்பு டிஜிபியின் கோரிக்கை நிராகரிப்பு

விழுப்புரம் நீதிமன்ற விசாரணைக்கு தடையில்லை: சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஆக. 27–

பெண் எஸ்.பி.க்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக தொடரப்பட்ட வழக்கு விசாரணையை விழுப்புரம் நீதிமன்றத்திலிருந்து மாற்ற வேண்டுமென்ற சஸ்பெண்ட் செய்யபட்ட சிறப்பு டிஜிபியின் கோரிக்கையை நிராகரித்த சென்னை ஐகோர்ட் , வழக்கு விசாரணையை 3 மாதத்தில் முடிக்க வேண்டுமென விழுப்புரம் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டம் ஒழுங்கு சிறப்பு டிஜிபி கடந்த பிப்ரவரி மாதம் பெண் ஐ.பி.எஸ். அதிகாரியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து, சிறப்பு டிஜிபியும் (ராஜேஷ் தாஸ்), பெண் எஸ்.பி. சென்னைக்கு வரவிடாமல் தடுத்த செங்கல்பட்டு எஸ்.பி. (டி. கண்ணன்) ஆகிய இருவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

புகார் குறித்து விசாரிக்க, கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் 6 பேர் கொண்ட உட்புகார் விசாரணைக் குழு எனப்படும் விசாகா கமிட்டி அமைக்கப்பட்டு, அந்த குழு அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்துள்ளது. சிபிசிஐடி போலீசாரும் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தன் மீது குற்றம்சாட்டப்பட்ட சம்பவம் பயணத்தின் போது நடந்துள்ளதாகக் கூறப்படுவதால், வழக்கை கள்ளக்குறிச்சி அல்லது செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களில் தான் விசாரிக்க வேண்டும் எனவும், விழுப்புரம் நீதிமன்றம் விசாரிக்க அதிகாரமில்லை என தாக்கல் செய்த மனுவை விழுப்புரம் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை எதிர்த்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட சிறப்பு டிஜிபி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி வேல்முருகன், வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரிய சஸ்பெண்ட் செய்யப்பட்ட சிறப்பு டிஜிபியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். மேலும், பாலியல் தொல்லை தொடர்பான வழக்கின் விசாரணையை 3 மாதங்களில் முடிக்க வேண்டுமென விழுப்புரம் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

காஞ்சீபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக கணேசன் பொறுப்பேற்பு

காஞ்சீபுரம், அக்.27–

காஞ்சீபுரம் மாவட்டத்தின் புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக ப. கணேசன் அலுவலகத்தில் பொறுப்பேற்று கொண்டார்.

காஞ்சீபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றி வந்த திவாகர் கடந்த மே மாதம் சென்னை கலைவாணர் அரங்கத்திற்கு மாற்றப்பட்டார்.

காஞ்சீபுரத்தில் உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றி வந்த சதீஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக கடந்த 5 மாதங்களாக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார்.

இந்நிலையில் சென்னையில் இருந்து மாற்றலாகி வந்த ப.கணேசன் காஞ்சீபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார். மேற்கண்ட அலுவலகத்தில் பணியாற்றி வரும் சக ஊழியர்கள் அவரை வரவேற்றனர். பிறகு ப.கணேசன் மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட அலுவலர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அண்ணா தி.மு.க. 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு சென்னை புறநகர் மாவட்டம் சோழிங்கநல்லூர் சட்ட மன்ற தொகுதி சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி சார்பாக பகுதி செயலாளர் எம்.கே. பழனிவேல் ஏற்பாட்டில் 5000 நபர்களுக்கு வேட்டி மற்றும் புடவையை மாவட்டச் செயலாளர் கே.பி. கந்தன் வழங்கினார். விழாவில் மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் தஞ்சை கே.ராஜசேகர், வடக்குப் பகுதி செயலாளர் ஜி.எம்.ஜானகிராமன், தெற்குப் பகுதி செயலாளர் வி.குமார், மேற்குப் பகுதி செயலாளர் டி.சி.கருணா, வட்ட கழக செயலாளர்கள் வி.நாராயணன், ஞானமூர்த்தி, வி.சங்கர், ராதா, சுரேஷ், டி.ரவி, எம்.எஸ். பாஸ்கர், ஏ.கிருஷ்ணமூர்த்தி, எம்.வெங்கடேஷ், எல். செந்தில்குமார், ரஞ்சித்குமார், ராஜேந்திரன், நாகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

★ தென்காசி ★ கள்ளக்குறிச்சி ★ மயிலாடுதுறை ★ திருப்பத்தூர் ★ ராணிப்பேட்டை ★ செங்கல்பட்டு

6 புதிய மாவட்டங்களில் புதிதாக சமூக நல அலுவலகங்கள்: அமைச்சர் பி.கீதா ஜீவன் தகவல்

சென்னை, அக்.27–

தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 6 புதிய மாவட்டங்களில் "சமூக நல அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளதாக சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் பி.கீதா ஜீவன் கூறியிருப்பதாவது:–

முதலமைச்சர் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் 'சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை' என்ற பெயரினை 'சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை' என்று பெயர் மாற்றம் செய்ததுடன், குழந்தைகள், மகளிர், மூத்தக் குடிமக்கள், திருநங்கைகள் ஆகியோரது நலனில் தனி கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

முதலமைச்சரின் அறிவுரைக்கு இணங்க, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் 2021–2022–ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை (மானியக் கோரிக்கை எண்.45) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்த போது, அமைச்சர் பி.கீதாஜீவன், "தமிழ்நாடு அரசால், தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 6 புதிய மாவட்டங்களில் "சமூக நல அலுவலகங்கள் புதியதாக ஏற்படுத்தப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

மூத்தக் குடிமக்கள், திருநங்கைகள்

குழந்தைகள், மகளிர், மூத்தக் குடிமக்கள், திருநங்கைகள் போன்ற சமூகத்தின் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்கென சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாட்டில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் சீரிய முறையில் செயல்படுத்துவதற்கு, அம்மாவட்டங்களில் புதிதாக மாவட்ட சமூக நல அலுவலகங்களைத் தோற்றுவித்து, அம்மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலர் உள்ளிட்ட பணியிடங்களைத் தோற்றுவித்தும், அப்பணியிடங்களுக்கும் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் உட்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் ஆகும் தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்காக ரூ.4 கோடியே 99 லட்சத்து 41 ஆயிரம் அரசால் ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் மூலம் சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக செயல்படுத்தப்பட்டு வரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் நலத் திட்டங்கள் பயனாளிகளுக்கு எளிதில் சென்றடைவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு.ரோசாரியோ த/பெ. S. A. பொன்னாண்டோ இவர்களது வாரிசுதாரர்கள் ஆகிய காலஞ்சென்ற திருமதி தேசம்மாள் என்பவருக்கு சொந்தமான 10 சென்ட் கொண்ட விக்கிரைய பத்திரத் தேதி 15/03/1953 மற்றும் ஆவண எண்:516/1953 தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது. இந்த ஆவணத்தை எனது கட்சிக்காரர் கடந்த 25/10/2021 அன்று சிட்லபாக்கம் ராஜேந்திர பிரசாத் ரோட்டில் உள்ள ஜெராக்ஸ் கடையில் தொலைத்துவிட்டார். இதனால் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி ஆவணத்தில் யாரேனும் தன் கைவசம் வைத்திருந்தாலோ அல்லது கண்டிருந்தாலும் இந்த அறிவிப்பு வெளியான ஏழு நாட்களுக்குள் கீழ்கண்ட முகவரியில் உள்ள நபரிடம் தவறாது சமர்ப்பிக்க வேண்டுகிறேன். மேற்கண்ட ஆவணங்களை வைத்து தவறான செயலில் ஈடுபட்டாலும் அல்லது 7 நாட்களுக்கு பிறகு சமர்ப்பித்தால் அது எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது மேலும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

S. அருணா வழக்கறிஞர்
எண்:1, கலைவாணி தெரு, ஆதிநகர், கிழக்கு தாம்பரம், சென்னை-600059

BEFORE THE HON'BLE FAMILY COURT, CHENNAI
G.W.O.P. 578/2021

Mrs. V.Anjugam,
W/o.G. Tirukumaran, No.M119,
Reserve Bank Staff Quarters,
Besant Nagar,
Chennai–600 090
...Petitioner

Vs

Mr.G. Tirukumaran,
S/o.Gangadharan, 5th Street,
Anna Nagar East, Vellore Dist
–632001
...Respondents

Please take notice that in the above H.M.O.P.No.545/2021 has been filed by the Petitioner to pass a Judgment and Decreeand to declare and appoint the 1st Petitioner's mother as a legal and natural Guardian of the minor girl child's namely 1) Madhuhasini T.A. and (2) T.Raksha Nivasini 2nd and 3rd Petitioners in the above G.W.O.P. The Hon'ble Court has ordered Paper Publication on 18.10.2021 to you on or before 01.11.2021 and adjourned the case on 15.11.2021. Kindly attend Before the Hon'ble Family Court, Chennai on 15.11.2021 at 10.30 a.m. failing which the matter will be decided in your absence on merits.

V. Anjugam
Party in Person

TANFAC INDUSTRIES LIMITED
Regd.Office: 14, SIPCOT Industrial Complex, Cuddalore – 607 005
NOTICE
LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the company are stated to have been lost or misplaced or stolen and the registered holder(s) / claimants thereof has applied to the Company for issue of Duplicate Share Certificate(s):

FOLIO	CERT NO	DIST NO	SHARES	NAME
94561	60521	3025565-3025614	50	LATHA SUBRAMANIYAM N SUBRAMANIYAM

The public are hereby warned against purchasing or dealing in any way, with the above Share Certificates. Any person(s) who has / have any claim(s) in respect of the said share certificates should lodge such claim(s) with the company at its Regd Office at 14, SIPCOT Industrial Complex, Cuddalore – 607 005 within 10 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue duplicate Share Certificates.

Place : Cuddalore –5
Date : 26-10-2021

For TANFAC INDUSTRIES LTD
RAVICHANDRAN N R
CHIEF FINANCIAL OFFICER

அருணா ஹோட்டல்ஸ் லிமிடெட்

நிறுவன அடையாள எண்: **L15421TN1960PLC004255**
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: அருணா மையம், 145, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600034,
தொலைபேசி: 044-2530 3404 மின்னஞ்சல்: directorsaruna@gmail.com, இணையதளம்: www.arunahotels.com

செப்டம்பர் 30, 2021 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனித்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை

(லட்சத்தில் ரூ.)

வரிசை எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2021 தணிக்கை செய்யாதது	முடிந்த காலாண்டு 30.09.2020 தணிக்கை செய்யாதது	முடிந்த காலாண்டு 30.06.2021 தணிக்கை செய்யாதது	முடிவடைந்த அரை ஆண்டு 30.09.2021 தணிக்கை செய்யாதது	முடிவடைந்த அரை ஆண்டு 30.09.2020 தணிக்கை செய்யாதது	முடிவடைந்த ஆண்டு 31.03.2021 தணிக்கை செய்தது
1	செயல்பாடுகளின் மொத்த வருமானம்	-	-	-	-	-	30.84
2	காலத்திற்கான நிகர லாபம் / (இழப்பு) (வரி, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்கள் முன்)	(233.90)	(192.26)	(130.00)	(363.90)	(274.33)	(874.30)
3	வரிக்கு முந்தைய காலத்திற்கு நிகர லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்களுக்குப் பிறகு)	(233.90)	(192.26)	(130.00)	(363.90)	(274.33)	(874.30)
4	வரிக்குப் பிந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண பொருட்களுக்குப் பிறகு)	(231.44)	(194.46)	(127.59)	(359.03)	(268.85)	(1,007.96)
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான இலாபம் / (இழப்பு) (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு)]	(231.44)	(194.46)	(127.59)	(359.03)	(268.85)	(1,007.96)
6	சமபங்கு பங்கு மூலதனம்	900.00	900.00	900.00	900.00	900.00	900.00
7	இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு இருப்புக்களைத் தவிர) / பிற பங்கு	(9,101.95)	(8,003.82)	(8,870.31)	(9,101.95)	(8,003.82)	(8,742.96)
8	ஒரு பங்கிற்கு சம்பாதிப்பது (தலா ரூ.10/-)						
	(தொடர்ச்சியான மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) ஈவுபங்குஒன்றுக்கு ஆண்டு வருமானம் இல்லை						
	a) அடிப்படை	(2.57)	(2.16)	(1.42)	(3.99)	(2.99)	(11.20)
	b) நீர்த்த	(2.57)	(2.16)	(1.42)	(3.99)	(2.99)	(11.20)

குறிப்புகள்: மேற்கூறியது, செபி விதிமுறை 33 ன் கீழ் (பங்கு பட்டியல்கள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள்), 2015, செப்டம்பர் 30, 2021 ஆம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் ஒரு பிரிவாகும். செப்டம்பர் 30, 2021 ஆம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டுக்கான அங்கீகரிக்கப்படாத நிதி முடிவுகளின் முழு வடிவம், பங்குச் சந்தையின் இணையதளத்தில்: **www.bseindia.com** மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் **www.arunahotels.com** கிடைக்கும்.

இடம்: சென்னை
நாள்: 25.10.2021

அருணா ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
ஆர் முரளிதரன்
நிர்வாக இயக்குனர்
இயக்குனர் அடையாள எண்: 07092976

வேப்கோ இந்தியா லிமிடெட்

CIN:L34103TN2004PLC054667
பதிவு அலுவலகம்:; ப்ளாட் எண் 3 (SP) 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058. Ph.91 44 42242000, Fax .91 44 42242009 www.wabcoindia.com, email: cvcs.info.india@zf.com

30 செப்டெம்பர் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சங்களில் EPS தவிர)

விவரங்கள்	முடிவடைந்த அரையாண்டு			நடப்பு காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.06.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2020 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம்	62,413.79	50,381.46	42,979.08	112,795.25	60,916.22	190,238.87
வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	4,495.17	3,085.18	5,092.28	7,580.35	1,197.73	15,226.52
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	4,495.17	3,085.18	5,092.28	7,580.35	1,197.73	15,226.52
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	3,225.20	2,138.39	3,510.55	5,363.59	374.15	10,380.49
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	3,277.94	2,089.74	3,236.35	5,367.68	80.04	10,185.59
சமபங்கு மூலதனம்						
ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக முந்தைய கணக்கு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி)						198,691.96
ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) அடிப்படை டைல்யூட்டட்	17.00 17.00	11.27 11.27	18.51 18.51	28.28 28.28	1.97 1.97	54.73 54.73

குறிப்புகள் :

1. மேற்கண்ட செப்டெம்பர் 30, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினரால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவர்களின் பரிந்துரையின்படி, இயக்குனர் குழு அக்டோபர் 26, 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட செப்டெம்பர் 30, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் நிறுவன தணிக்கையாளர்களால் வரையறைக்குட்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தணிக்கையாளரின் அறிக்கை மாற்றியமைக்கப்படவில்லை.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, மாற்றப்பட்ட இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு விதிகள் 2015, மற்றும் இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டுகள் (இண்ட் ஏஎஸ்)-க்கு ஏற்றவாறு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. செயல்பாடுகளின் வருவாய் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு			நடப்பு காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.06.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2020 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)
பொருட்கள் விற்பனை	55,882.89	44,404.53	36,650.42	100,287.42	48,305.62	166,642.54
மற்றவைகள்	5,770.24	4,787.18	5,221.07	10,557.42	10,162.43	19,707.47
மொத்தம்	**61,653.13**	**49,191.71**	**41,871.49**	**110,844.84**	**58,468.05**	**186,350.01**

4. கம்பெனி இயக்கம் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு துறையை மட்டும் சார்ந்தது.
5. கடந்த ஆண்டுகளில் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளையை[யில்] இருந்த வைப்பு நிதி நிலுவைத்தொகை வழங்கல் / தீர்த்தல் மற்றும் நிறுவனத்திலிருந்து குறித்த கால ஊழியர்களுக்கு செய்யப்பட்ட பண பட்டுவாடாக்களில் முறைகேடு நடந்ததாக கண்டறியப்பட்டது. இது தொடர்பாக நிர்வாகம் தொடங்கிய விசாரணை முடிவு செய்யப்பட்டு அதன் அறிக்கை பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய அறிக்கையின் அடிப்படையில், முந்தைய ஆண்டில் பதிவு செய்த செலவினமான மேல் INR 500 லட்சத்திற்கு மேல் கூடுதல் செலவுகள் எதுவும் தேவையில்லை என்று கருதப்படுகிறது.
6. முந்தைய காலாண்டுக்கான / காலத்திற்க்கான தொகைகள் நடப்பு காலாண்டுக்கான/ காலத்திற்கான காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டது.

சென்னை
26.10.2021

இயக்குநர் குழு சார்பாக
P கனியப்பன்
நிர்வாக இயக்குனர்

SAPTARISHI™
Agro Industries Ltd

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பாக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு –603 308.
www.saptarishiagro.com || Email: Saptarishi121@gmail.com ||
CIN: L15499TN1992PLC022192 || Contact: 07940306965 ||

30 செப்டம்பர், 2021–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கு விபரத்தை தவிர ரூ.லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2021 தணிக்கை செய்யாதது	30.06.2021 தணிக்கை செய்யாதது	30.09.2020 தணிக்கை செய்யாதது	முடிந்த ஆண்டு 31.03.2021 தணிக்கை செய்தது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	1038.24	807.44	1129.77	3571.98
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	12.62	6.26	17.95	39.34
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	12.62	6.26	17.95	39.34
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	12.62	6.26	17.95	39.34
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டத்தை) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)	12.62	6.26	17.95	39.34
6	சம பங்கு மூலதனம்	3402.00	3402.00	3402.00	3402.00
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)				(2988.48)
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/) (வருடாந்திரம் அல்ல)	0.04	0.02	0.05	0.12
	அடிப்படை & பலமிழந்தது	0.04	0.02	0.05	0.12

குறிப்பு:

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 29/10/2021 அன்று நடைபெற்ற கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவுக் குறிப்பு செய்யப்பட்டது மற்றும் அது கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனை செய்யப்பட்டது.
2. செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் (www.saptarishiagro.com) உள்ளது.

இடம் : அகமதாபாத்
தேதி : 26.10.2021

சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ஸ்ரீ குருணால் ராவ்ஜிபாய் படேல்
சேர்மன்
DIN : 02517567